‘நியாயமான அளவு தமிழ் உபயோகம்’ —‘மாலா’வின் கார்ட்டூன் 3-ம்பக்கம்!


# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 24-12-61 ஞாயிறு | இதழ் 28


அமைதியின் காவலனான நேருஜி கூடக் குமுறிவிட்டார்! இலங்கையின் நிலையோ சொல்லத் தேவையில்லை!! உலகெங்கும் கொந்தளித்துக் கொண்டிருக்கும் இதயங்களுக்கு, ஏசு பிறந்த தினப்பிரார்த்தனை சாந்தி அளிப்பதாக அமையட்டும்.



# என்.எம்.பெரராவுக்கு அரசாங்க எம். பி. களின் உதவி கிடைக்கிறதா?

வேலை நிறுத்தப் புயல் படுமோசமான முறையில் இலங்கையில் வீசுவது நேயர்களுக்குத் தெரிந்ததே!—

● பிரயாணிகளைத் திக்குமுக்காடச் செய்த பஸ்தொழிலாளர்களின் வேலைநிறுத்தம், தற்காலிக வாக்குறுதி ஒன்றின் பேரில் தீர்க்கப்பட்டமட்டில் இருக்கிறது.

● பெருந்தொகையான உணவுப் பொருள்களை ஏற்றி வந்த அநேக கப்பல்கள், துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தால், பண்டங்களை இறக்குவதற்கு, இராணுவத்தின் உதவியை எதிர்பார்த்திருக்கின்றன.

● வங்கி ஊழியர்கள், முன்னே தற்காலிகமாக நிறுத்தி வைத்த வேலைநிறுத்தத்தை எந்தநேரமும் மீண்டும் ஆரம்பிக்கலாமென்று தோன்றுகிறது.

● தபால் ஊழியர்கள், தாங்கள் விடுத்த 13 கோரிக்கைகளுக்கும் விரைவில் பதில் கிடைக்காவிட்டால், என்ன விதமான நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி ஆலோசித்து வருகின்றனர்.

● மின்சார ஊழியர்கள், அடையாள வேலைநிறுத்தம் செய்துவிட்டு, அதன் பலாபலன்களை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

● பெற்றோல், மண்ணெண்ணெய்க் குத ஊழியர்கள், தாமத வேலையை ஆரம்பித்து விட்டார்கள்.

● ரயில்வே தொழிலாளர்கள், தாங்கள் விடுத்த கோரிக்கைகளுக்கான பதிலைப்பெற, வருகின்ற 7-ம் தேதி மட்டும் காத்திருப்பதெனத் தீர்மானித்துள்ளனர்.

இவையெல்லாம் —

அரசியல் காற்று எந்தத்திக்கில் வீசுகின்றதென்பதையே தெளிவாகக் காட்டுகின்றன. ‘‘டைம்ஸ் ஒவ் சிலோன்’’ பத்திரிகை, தனது ஆசிரியத் தலையங்கத்தில் கூறுவது போல்இத்தனை பேருக்கும் தங்கள் குறைகள் நிவர்த்திக்கப்படவேண்டும் என்ற ஞானோதயம் ஒரே சமயத்தில் ஏற்பட்டிருப்பது ஆச்சரியம்தான்!

இந்த ‘ஆச்சரியத்தை’ தெளிவாக விளங்கிக்கொண்டவர்கள் ஒருசில அரசாங்கக் கட்சி எம். பிக்கள் என்று நமது நிருபர் அறிவிக்கிறார்.

இந்த நபர்கள் சமசமாஜத் தலைவர்களோடு அடிக்கடி கூடி உறவாடுவதை இப்போது அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

அரசாங்கக் கட்சிக் கூட்டங்களிலிருந்து விலகியிருப்பதும், மந்திரிமார் இருக்கின்ற இடங்களிலிருந்து தூர விலகியிருப்பதுமே இப்போது இவர்கள் அரசாங்கக் கட்சிக்குச் செய்யும் சேவையாகும்!



## ‘கோவா நிகழ்ச்சி’யின் கதாநாயகன்!

[கோவா ‘மகாயுத்தம்’ பற்றி சில சுவையான குறிப்புகளை அடுத்த வாரம் ‘புதின’த்தில் படிக்கலாம்.]

### சமசமாஜ கட்சியின் புத்தகத்துக்கு ஒரு விமர்சனம்

# தமிழ் மக்களின் தலைமைப் பதவியை சமசமாஜக் கட்சி கோட்டை விட்டதேன்?

**‘தமிழ் மக்களும், சமசமாஜக் கட்சியும்’ என்ற பெயரில் இலங்கை சமசமாஜக் கட்சி, அண்மையில் ஒரு சிறு நூலை வெளியிட்டுள்ளது.**

சமசமாஜக் கட்சியின் ‘பெருந் தலை’களான சிங்களப் பெருமக்கள், சிறுபான்மை இனத்தவரான தமிழ் மக்கள் பிரச்சினையில் என்ன கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறவர்கள், இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்ப்பது நல்லது.

புத்தகத்தின் முன்னுரையில் திரு. வை. காராளசிங்கம் கூறியிருப்பதுபோல இந்தப் பேச்சுக்கள் யாவும் தமிழ் மக்களின் அரசியல் தலைமை முழுவதும் இன்னொரு கட்சியிடம் இருக்கின்ற நேரத்தில் நிகழ்த்தப்பட்டவை என்பதை உணரும்போது நமது நெஞ்சில் ஒரு பரிசுத்தமான உணர்ச்சி பரவுகின்றது. சமசமாஜக் கட்சியின் பெருந்தலைவர்களது அந்தரங்க சுத்தியையும், நேர்மையையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

அண்மைக் காலத்தில்தமிழ் மக்களுக்கு இன்னல்களும் இடுக்கண்களும் நேர்ந்தபோதெல்லாம் சமசமாஜக் கட்சி தனது தலைவர்களில் ஒரு சிலரை இங்கு அனுப்பி நிலைமையை நேரடியாகக் கண்டறிய முயற்சித்ததும்,மேற்படி கட்சியின் தலைவர்கள் தமிழ் மக்கள் பிரச்சினையில் எவ்வளவு தூரம் அக்கறை காட்டுகின்றார்கள் என்பதைத் தெரிவிக்கிறது.

சத்தியாக்கிரகத் தொடக்கத்தில்பொலீசார் சத்தியாக்கிரகிகளைத் தாக்கியதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் கண்டறிந்த திரு. பேர்னாட் சொய்ஸா பாராளுமன்றத்தில் பேசும் போது ‘‘துறைமுகத்தில் சாமான்களை இறக்கும் போது, அரிசி மூட்டைகளைத் தூக்கி வீசும் விதத்தில், சாக்குகளில் வரும் சாமான்களை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு வீசும் விதத்தில், அந்த சத்தியாக்கிரக இயக்கத்தில் பங்குபற்றியிருந்தவர்கள் தூக்கி வீசப்பட்டிருக்கிறார்கள் என்பதை அங்கு அந்த சம்பவத்தைப் பார்த்துக்கொண்டு நின்றவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள முடிந்தது...... கௌரவ உப சபாநாயகர் அவர்களே, கடுமையான காயமடைந்தவர்களில் இருவரை நான் சந்தித்தேன். ஒருவருடைய மர்மஸ்தானம் காயமடையும் விதத்தில் காலால் உதைக்கப்பட்டிருக்கிறார்! .............. கொடுமைகள் செய்தது யார்? அவைகள் எவ்வாறு நடைபெற்றன? ஆரம்பமாவதற்கு காரணமென்ன? ஆகிய விடயங்களை இந்நாடும், கௌரவ இச் சபையும் அறியும்படி செய்ய ஒரு விசாரணைச் சபையை நியமிக்கும்படி வேண்டுகிறேன்’’ என்று கூறியிருக்கிறார். இந்தப் பேச்சும் இப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது.

[3-ம் பக்கம் பார்க்க]

அன்பார்ந்த வாசகருக்கு,

'புதினம்' சென்ற 26-11-61-ம் திகதி இதழில், ஒரு தவறு செய்துவிட்டது!

தமிழரசுக் கட்சியின் தங்தை எனப் போற்றப்படுபவரும், நேர்மையுள்ள அவருடைய அரசியல் எதிரிகளாலும் கௌரவிக்கப்படுபவரும், இலங்கைத் தமிழ் மக்களின் இன்றைய மாபெரும் தலைவருமாகிய திரு. செல்வநாயகம் அவர்களை, 'தமிழன்' பத்திரிகை தாக்கி எழுதியது. ஒரு சிறிதளவு கூடப் பொறுப்பற்ற முறையில் பத்திரிகை உலகமே வெட்கப்படக் கூடிய விதமாக வசைபுராணம்பாடிற்று. அதைப்பார்த்த தமிழ் அபிமானிகள் தமிழனைத் தாக்கிக் காரசாரமான கடிதங்களை 'இத்தால் சகலரும் அறியவேண்டு'மென்றவிருப்பத்தில் எமக்கு அனுப்பியிருந்தார்கள்.

பொதுமக்களின் கருத்தை பிரதிபலிக்கும் முறையில் அடுத்தவார இதழில் எமது ஓவியர் 'மாலா' ஒரு சிறந்த கேலிச்சித்திரத்தை வரைந்து அதன் மூலம் அநேக பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டார்.

அந்தக் கேலிச்சித்திரத்தைப் பிரசுரித்ததுதான் புதினம் செய்த தவறு. ஏன் தெரியுமா? அதைப்பார்த்த பிறகுதான் இலங்கை எங்குமுள்ள அநேக வாசகர்கள் 'தமிழன்' என்று ஒரு பத்திரிகை வருகிறதா?' என்று எழுதிக்கேட்டிருக்கிறார்கள்! இதற்குமேலும் 'தமிழ'னுச்கு இலவச விளம்பரம் கொடுக்க விரும்பாமல் அந்த விஷயத்தை அவ்வளவுடன் நிறுத்தியிருந்தோம்.

குறித்த கேலிச் சித்திரத்தை நீங்கள் ஒருபோதும் மறக்க முடியாது. செல்வநாயகம் என்ற சந்திரனைப் பார்த்து 'தமிழன்' என்ற நாய் குரைக்கிறது. 'சந்திரனைப் பார்த்து நாய் குரைப்பது போல' என்ற பழமொழியைத் தெரியாத தமிழர்கள் இல்லை இத்தகைய தொடர்களில் அரசியல் கருத்துக்களை அமைத்து விளக்குவது கேலிச்சித்திரக்காரரின் மரபு. பத்திரிகைக்காரர்களுக்குமட்டுமின்றி, நல்ல வாசகர்களுக்கும் இது தெரியும்.

ஆனால், 'தமிழன்' சார்பில் வழக்குரைக்க வந்த 'காண்டீப'னுக்கு இது பிடிபடவில்லை.

குறித்த சித்திரத்தில், திரு. செல்வநாயகம் அவர்களை 'தமிழன்' பத்திரிகை கேவலமாகத் தாக்கிய முறை மட்டும் தான் கண்டிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால்—

● 'தமிழன்' பத்திரிகையைத் தூக்கி நிறுத்திவைத்துத் துகிலுரிந்து, எங்கெங்கே 'ஆபாசம்' இருக்கிறதென்று பார்க்க நாம் ஆசைப்பட்டது இடையாது.

● 'தமிழன்' பத்திரிகை எந்த அச்சகத்தில் அச்சிடப்படுகிறது என்று கண்டு பிடித்து அந்த அச்சகத்தின் பெயருக்கு ஒரு 'வாழ்த்து'க் கொடுக்கவும் நாம் எண்ணியதில்லை. (நல்ல வேளை! எந்த 'டைப்பவுண்டரி' எழுத்துக்களால் புதினம் அச்சிடப்படுகிறது, எந்தக் கம்பனிக் கடதாசியில் அச்சிடப்படுகிறது என்பன போன்ற அரிய விஷயங்களையெல்லாம் 'கண்டு பிடித்து' அந்தக் கம்பனிகளுக்கும் ஒரு பாட்டுப் பாடாமல் விட்டுவிட்டார் 'காண்டீபன்'! —அவர்களாவது பிழைத்துப்போகட்டும்!)

● 'தமிழ'னில் திரு செல்வநாயகத்தைப்பற்றிக் கட்டுரை (வசவுரை) எழுதிய அந்த எழுத்தாளர், வேறு என்ன நூல் எழுதியிருக்கிறார், அந்தப் பெயரை உபயோகித்து எவ்வாறு அவரைத் தாக்கலாம் என்பனபோன்ற அபூர்வ ஆராய்ச்சிகளிலும் நாம் இறங்கியதில்லை

திருவாளர் 'காண்டீபன்' இந்தச் சிறப்பான பணிகளையெல்லாம் சரிவரப் புரிந்திருக்கிறார். இவைமட்டுமல்ல, வேறு ஏதேதோ சம்பந்தா சம்பந்தமில்லாமல் உளறிக் கொட்டியிருக்கிறார்.

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு ஜி ஜி. பொன்னம்பலம் அவர்களை அநாவசியமாக இழுத்திருக்கிறார். 'புதின'த்தில் வெளியான கேலிச்சித்திரத்துக்கும், திரு. பொன்னம்பலத்துக்கும் என்ன தொடர்பிருக்கிறது? தெரிந்தோ தெரியாமலோ ஈனத்தனமாக எழுதித்தான் சம்பாதித்துக்கொண்ட சிறுமையில், கௌரவமிக்க தமிழ்த் தலைவர் ஜி. ஜி யை இழுத்திருப்பதன் மூலம். ஒரு முறை தான் செய்த தவறை மீண்டும் செய்கிறார் காண்டீபன்!

இவற்றுக்கும் மேலாக அந்தக் காலத்து நாடக உலகில் "ராஜாதிராஜ' ராஜகெம்பீர, வீர சூர தீரன் நானே!" என்று தனக்குத்தானே கட்டியங் கூறும் நடிகனைப்போல, 'தமிழன்' அப்படியானவன், இப்படியானவன்; அது செய்வான், இது செய்வான் என்று கட்டியமும் கூறியிருக்கிறார்.(பளா! பளா! அமோகமாக நடக்கட்டும். நமக்கு ஆட்சேபனையே இடையாது!)

கடைசியில் 'புதின'த்துக்கு எச்சரிக்கையும் செய்கிறார்; 'பிடிசாபம்: சாம்பலாகிப் போவாய்!' என்று சாபமும் கொடுக்க முனைகிறார் இந்தமேதை! —நாம் ஆத்திரமடையவில்லை பரிதாபப்படுகிறோம், அவருக்கு இந்த நிலைமை ஏற்பட்டதைக் குறித்து!

'புதின'த்தின் மீது ஒருவித வெப்பக் கதிர்க் கணையைத் தொடுத்து விட்டதாக மனப்பால் குடிக்கும் இந்தக் 'காண்டீபன்' என்னதான் சொல்லியிருக்கிறார் என்று வடிகட்டிப் பார்த்தால்—

1. 'புதினம்' ஒரு ஆபாசப் பத்திரிகை.

2. தமிழரசுக் கட்சியைப் 'புதினம்' ஆதரிக்கிறது.

3. 'தமிழ'னின் செல்வாக்கைக் கண்டு 'புதினம்' பொறுமைப் படுகிறது.

4. 'புதினம்' ஆசிரியர் 'கயமை மயக்கம்' என்ற—கூடாத பெயரில்—ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார்.

இந்த நான்குந்தான் தெளிவாகவும் மறைமுகமாகவும் அவர் சுட்டிக்காட்டும் குற்றச்சாட்டுகள்.

ஒவ்வொன்ருகப் பார்ப்போமா?

இப்போதல்ல, அடுத்த வாரம்!

— 'புதினம்' ஆசிரியர்.

ஆபிரிக்காவில்

# கிறீஸ்துவின் சொரூபம்!

## நரமாமிசம் தின்போரையும் மனம்மாற்றியது!

ஆபிரிக்காவின் அடர்ந்த காடு ஒன்றின் மத்தியில் புகுந்துகொண்டிருந்தனர் சிலவிஞ்ஞானிகள். ஆபிரிக்காக் காடு முழுவதையும்சுற்றிப் பார்த்து பற்பல விதமான ஆராய்ச்சிகளை நடத்தவேண்டும் என்பதுதான் அவர்கள் திட்டம். பயங்கர வனவிலங்குகள் வாசம் செய்யும் இருளடர்ந்த காடு அது. அத்தோடு மனிதர்களைப் பிடித்து, அவர்கள் மாமிசத்தைத் தின்னும் காட்டுமிராண்டிகளும் அந்தக்கானகத்தில் வசித்து வந்தனர்! இந்த விஷயம் அந்த ஆராய்ச்சியாளர்களுக்கும் நன்கு தெரியும். இருந்தாலும், ஆராய்ச்சியென்று புகுந்துவிட்டால் பயங்கரத்தைப் பார்த்தால் முடியுமா? மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு காட்டின் ஊடே மெதுவாக நடந்துகொண்டிருந்தனர் ஆராய்ச்சியாளர்.

திடீரென்று—

"கிறீச்" என்று ஒருவித பயங்கரமான—பலமான அலறல் சப்தம் கேட்டு, அந்த இடத்திலேயே ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றுவிட்டனர். எங்கிருந்தோ பாய்ந்து வந்த ஒரு காட்டுப்பன்றி, அவர்களுக்கு முன்னால் வந்து பொத்தென்று விழுந்து, பயங்கரமாகக் கூக்குரல் எழுப்பிக் கொண்டிருந்தது. அதன் விலாவில் ஒரு அம்பு ஆழமாகக் குத்தி, அதிலிருந்து இரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது!

திடுக்கிட்டுப் பின்னால் திரும்பிப்பார்த்த ஆராய்ச்சியாளர்களில் ஒருவர் 'வில்' என்று கத்திவிட்டார்!

பின்னால்—

பத்துப் பன்னிரண்டு காட்டுமிராண்டிகள் அரைநிர்வாண கோலத்துடன் ஓடிவந்து கொண்டிருந்தனர்! ஆராய்ச்சியாளர் ஒவ்வொருவரின் கையிலும் துப்பாக்கி இருந்தது. என்ருலும், அந்த அதிர்ச்சியில் அர்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. பயத்தில் அசையாமல் நின்றுவிட்டனர். ஓடிவந்த காட்டுமிராண்டிகள் ஆராய்ச்சியாளர்களைச் சூழ்ந்து கொண்டனர். காட்டுமிராண்டிகளை அன்றுதான் முதன் முதலாகக் கண்ணால் கண்ட அந்த ஆராய்ச்சியாளர்கள், கதிகலங்கிப்போய் நடுநடுங்கி நின்றனர்!

ஆனால்—

ஆச்சரியத்திலும்ஆச்சரியம். காட்டுமிராண்டிகள் அவர்களை ஒன்றுமே செய்யவில்லை! அவர்களை அன்போடு அழைத்துச்சென்று, அவர்கள் கொன்ற காட்டுப்பன்றியை நெருப்பில் வாட்டி, ஆராய்ச்சியாளர்களுக்கு பிரமாதமான 'விருந்து' கொடுத்து உபசரித்தனர். ஆராய்ச்சியாளர்களுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. அப்படியானல் காட்டுமிராண்டிகளைப்பற்றி அவர்கள் கேள்விப்பட்டதெல்லாம் பொய்யா? விருந்து முடிந்து ஒரு பெரிய குகைக்குள் அவர்களை அழைத்துச் சென்றனர் அந்தக் காட்டுமிராண்டிகள்

அங்கே—

ஆராய்ச்சியாளர்கள் கண்களை அவர்களால் நம்பவே முடியவில்லை! ஒரு கல்லின் மேல் ஏசுநாதரின் சொரூபம் ஒன்று காட்சியளித்துக்கொண்டிருந்தது! ஆராய்ச்சியாளர்களில் ஒருவருக்குச் சற்றுத் தைரியம் பிறந்துவிட்டது. காட்டுமிராண்டிகளை நோக்கி அவர் கேட்டார்:

"அது என்ன சொரூபம்?"

காட்டுமிராண்டிகளின் தலைவன் அவர் கேள்விக்கு விளக்கம் தந்தான்:

"நீங்கள் நகருக்குள் இருந்து வருகிறீர்கள் என்று நினைக்கிறேன். நீங்களே இந்தக்கேள்வியைக் கேட்பது ஆச்சரியமாக இருக்கிறது! அது கிறீஸ்துநாதரின் சொரூபம். தெரியவில்லையா?"

"அப்படியானல் நீங்கள் கிறீஸ்தவர்களா?"

"கிறீஸ்தவர்களா?...அப்படியென்றல்? ..அதைப்பற்றியெல்லாம் எங்களுக்குஒன்றும் தெரியாது. கொஞ்சநாட்களுக்கு முன்னர் ஒரு சுவாமியார் இந்தக் காட்டுக்குள் வந்தார், அவரை நாங்கள் பிடித்துக் கொண்டோம்!—அவரைத் தின்பதற்காகத்தான்!—ஆனல் அவர் அதைப்பற்றிக் கவலைப்படவே இல்லை. கிறீஸ்துவைப் பற்றி எங்களுக்குப் போதித்தார். அன்றுமுதல் நாங்கள் செய்தது பாவம் என்பதை உணர்ந்தோம். நரமாமிசம் தின்பதில்லை......அந்த சுவாமியார் கொடுத்த சொரூபம் தான் அது" என்ருன் அவன்.

"பயித்தியக்காரர்கள்! ..... உங்களை அந்த சுவாமியார் நன்ருக ஏமாற்றிவிட்டார். கடவுள் ஏது? விஞ்ஞானம் தான் கடவுள்! அதுதான் நாகரிகத்தையும், வளமான வாழ்வையும் அளிக்கும். நீங்கள் அந்தச் சுவாமியை நம்பி, இந்தச் சொரூபத்தை வைத்து வணங்குவதால் உங்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டுவிட்டது?" என்று அந்த விஞ்ஞானிகளுள் ஒருவர் ஏளனமாகக் கேட்டார்.

காட்டுமிராண்டிகளின் தலைவன் கூறினன்: "எங்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டுவிட்டது என்ரு கேட்கிறீர்கள்? எங்களுக்கு ஏற்படவில்லையென்று வைத்துக்கொண்டாலும், உங்களுக்குப்பெரிய நன்மைஏற்பட்டிருக்கிறதே!"

"என்ன? எங்களுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறதா? .. ஒன்றும்விளங்கவில்லையே!..."

"நாங்கள் அந்தச் சுவாமியாரைச் சந்திக்கவில்லையென்ருல், இப்பொழுது உங்களை வேக வைத்து முதல்தரமான உணவாகவல்லவா உண்டிருப்போம்! இதைவிடப் பெரிய நன்மை வேறு என்ன வேண்டும்?" என்ருன் காட்டுமிராண்டிகள் தலைவன்.

ஒருவர் முகத்தை ஒருவர் மாறிமாறிப் பார்த்துக்கொண்டனர், ஆராய்ச்சியாளர்கள்!

## ஆராரோ பாலகனே!

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ

○

பூவுலகத்தில் முந்த ஏவை சதியால் வந்த
பாவமகற்ற இந்த ராவில் குளிரடர்ந்த
தாவரத்தில் மிகுந்த ஆவலுடன் பிறந்த
தேவசுதனே எம்மை மேவி அழுகின்றீரோ?
— ஆராரோ...

○

அன்னைமரி பாலூட்ட அன்பன் சூசை தாலாட்ட
ஆயர்பால் தயிர்கொண்டு நேயர் காணிக்கை நீட்ட
தன்னிகரில்லா உம்மை உன்னி வானவர் போற்ற
தங்காப் பாவத்தைப் போக்க ஏங்கி அழுகின்றீரோ?
— ஆராரோ.....

○

கல்லோ தலையணையாய், கந்தைத்துணி பொதிந்து
காளை இரண்டுக்கிடையில் ஏழையுருச் சொரிந்து
புல்லோ பூம் பஞ்சணையாய் பூங்கொடிபோல் நலிந்து
புண்ய சொரூபா எம்மை எண்ணியழுகின்றீரோ?
— ஆராரோ......

— வித்துவான். செ. முத்தையா றொட்ரிகோ.

## சமசமாஜக் கட்சியின் புத்தகத்துக்கு ஒரு விமர்சனம்.

# தமிழருக்கிழைத்த கொடுமைகள் குறித்து

# சமசமாஜத் தலைவர்களின் சீற்றம்!

## ஆனுலும்.......

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டபோது சமசமாஜக் கட்சி பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றும் இப்புத்தகத்தில் காணப்படுகிறது. அந்த அறிக்கையில் "…………அரசாங்கத்தின் பிழையான கொள்கைகளும், புத்திசாலித்தனமற்ற செய்கைகளும் தான் இன்றைய நிலைமையை உருவாக்கியுள்ளன என்பதை இலங்கை சமசமாஜக் கட்சி சுட்டிக்காட்ட விரும்புகிறது. உண்மை இவ்வாறிருக்கையில் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது போல சில பிரதேசங்களில் சீர்குலைந்துள்ள நிர்வாகத்தை திரும்பவும் நிலை நாட்டுவதற்குமாத்திரமல்லாது, தமது நியாயமான மொழி உரிமைகளுக்காகப்போராடும் தமிழ் மக்களின் இயக்கத்தை நசுக்கவும் அடக்கவும் அரசாங்கம் தனது அவசரகால அதிகாரங்களைப் பிரயோகிக்கும் என்பதில் இலங்கை சமசமாஜக் கட்சிக்கு எவ்வித சந்தேகமுமில்லை. அப்படியான அடக்கு முறைக்கு இலங்கை சமசமாஜக் கட்சி எவ்விதத்திலும் ஆதரவு அளிக்காது. தமிழ்ப் பேசும் மக்களின் நியாயமான மொழிக்கோரிக்கைகளை திருப்திப்படுத்துவதற்கு வேண்டிய சட்ட சம்பந்தமான, நிர்வாக நடவடிக்கைகளை அரசாங்கம் எடுப்பதுதான் தமிழ்ப் பிரச்சினையைத் தீர்க்கும் ஒரேயொரு மார்க்கம் என்பதைக் கட்சி திரும்பவும் கூற விரும்புகிறது………"என்று கூறப்பட்டுள்ளது.

இந்தப் புத்தகத்தைப் படிக்கும்போது பாராளுமன்ற நடைமுறை சம்பிரதாயங்களில் டாக்டர் என். எம். பெரைராவிற்கு இருக்கும் அபார அறிவையும், திரு. கொல்வின் ஆர் டி. சில்வாவின் சொல்லாற்றலையும், பிரச்சினைகளைத் தெளிவாக அலசுவதில் திரு. டொரிக் டி சூசாவினது கெட்டித்தனத்தையும், சிறுபான்மையோருக்கு அநீதி இழைக்கப்படும் நேரங்களிலெல்லாம் ஆத்திரமும் உணர்ச்சியும் மேலிட அஞ்சாது பொங்கியெழுந்து கர்ச்சிக்கும் திரு. எட்மண்ட் சமரக்கொடியினது வீரக் குணத்தையும், நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

கம்யூனிஸ்ட் கட்சியின் 'திருகுதாளங்களை' மிக நைசாகவெளியிடும்முறையிலும் ஒரு சிறு செய்தி இதில் இருக்கிறது. 1-5-61ல் இலங்கையிலுள்ள தொழிற் சங்கங்களின் இணைப்புச் சபையின் ஆதரவில் கொழும்புக் காலிமுக மைதானத்தில் நடைபெற்ற ஐக்கிய மேதினப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் இதில் இடம் பெற்றுள்ளன, இது சம்பந்தமாக எழுதப்பட்டுள்ள குறிப்பில் "தோழர் டாக்டர் என். எம். பெரேரா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், திரு தொண்டைமான் தலைமையிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பங்கு பற்றியதை ஆட்சேபித்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பங்கு பற்றாதது குறிப்பிடத் தக்கது" என்று எழுதப்பட்டுள்ளது. இது கம்யூனிஸ்ட்டுகளின் திருகுதாளங்களை விளக்குவதற்கு நல்லதொரு உதாரணம்தான்!

திரு. எட்மண்ட் சமரக்கொடியின் பேச்சுக்களிலிருந்து எந்தப்பகுதியை எடுத்துக்காட்டுவது எந்தப் பகுதியை விட்டு வைப்பது என்று தெரியவில்லை. ஏனெனில், அவரது பேச்சின் ஒவ்வொரு எழுத்துமே உணர்ச்சியும் ஆத்திரமும் நிறைந்து, ஆட்சியாளர்கள் நெஞ்சில் பாயும் ஈட்டிகளாக இருக்கின்றன.

"அண்மையில் யாழ்ப்பாணத்தில் முடிக்குரிய வழக்குரைஞர் சிவபசுபதி வீட்டில் விளக்கேற்றி வைக்கப்பட்டிருந்தது. அவ் வீட்டுக்குள் புகுந்த ராணுவத்தினர் விளக்கை அணைக்கும்படி ஆணையிட்டனர். தாம் மறுநாள் பேசவேண்டிய வழக்கைப்பற்றி படித்துக்கொண்டிருப்பதாக வழக்குரைஞர் சிவபசுபதி பதிலளித்தார். உடனே ராணுவத்தினர் மானஈனமாகத் தூஷித்து, விளக்கை அணைக்குமாறு நிர்ப்பந்தித்தனர். இதுபற்றி, பிரதம நீதி அரசரிடமும் புகார் செய்யப்பட்டுள்ளது.

"கரையூரில் சைக்கிளில் சென்ற ஒருவரை, ராணுவ மோட்டார் வாகனம் தட்டி வீழ்த்தியது. அந்த சைக்கிள்காரர் ஆட்சேபீக்கு முகமாக அறிகுறிகள் காட்டியதும், அந்த ராணுவத்தினர் அவரை நையப்புடைத்ததோடு, அக்கம் பக்கத்திலிருந்த சுமார் முப்பது பேரையும் கைது செய்து விட்டனர்.

"நாவாந்துறையிலே, ஒரு பெண்மணியை ராலுவத்தினர் கடத்திச் சென்று, பன்னிரண்டு மணி நேரத்துக்குப் பின்னர் அவளை வீட்டில் கொண்டுவந்து விட்டனர்:

"இது இலங்கையின் பெண் நலத்துக்கே செய்யப்பட்ட பெரும் அநீதியாகும்! பெண்மணி தலைமை தாங்கும் ஒரு நாட்டின் ஆட்சியிலே இப்படியும் நடைபெறுகிறது."— இப்படிப் பலவகையான நிகழ்ச்சிகளை திரு. எட்மண்ட் சமரக்கொடி தனது பேச்சில் குறிப்பிட்டிருக்கிருர்.

அவர் மேலும் தொடர்ந்து பேசும்போது "அளவெட்டிப் பகுதியில் ஏப்ரில் 28 ம் திகதியன்று ஒரு பெண்மணி—ஏழு பிள்ளைகளுக்குத் தாய்—அவரின் கடைசிக் குழந்தைக்கு ஒரு மாசமும் ஆகவில்லை. —அவரை ராணுவத்தினர் பலவந்தம் செய்தனர். அந்தப் பெண்மணியின் வீட்டிலிருந்து 100 யாருக்கப்பால் உள்ள ஒரு வீட்டுக்குள் புகுந்து 16 வயதுப் பெண்ணென்றைக் கற்பழித்தனர். அப் பகுதியிலுள்ள பெண்கள் எல்லாரும் ஓடி ஒளித்துக்கொண்டனர்.

"ஆம், ராணுவத்தினரது இந்த அட்டூழியங்கள், தானே சுயமாக எழுந்தவையல்ல. இவை இலங்கை சுதந்திரக் கட்சி அரசாங்கத்தினுல் திட்டமிட்டு, தமிழ் பேசும் மக்களை இழிவுபடுத்தச் செய்யப்பட்ட செயல்களாகும். இந் நாட்டிலே தமிழ் சிறுபான்மையினரை இழிவுபடுத்தச் செய்யப்பட்டவையாகும்!

"புராதனப் பெருமை வாய்ந்தவர்களை—தங்களுக்கெனவரலாறு உள்ளவர்களை—இந்த நாட்டில் சிறுபான்மையினராகவுள்ள தமிழ் பேசும் மக்களை, எங்கள் கண்ணுக்கு முன்னுல் அரசாங்கம் இப்படி இழிவுபடுத்தியுள்ளது.


"தென்னுபிரிக்காவில்" உள்ள இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிராக சாம்ராஜ்யப் பிரதமர்கள் மகாநாட்டிலே கண்டனக் குரல் எழுப்பிய பிரதமர் சிறிமாவின் நாக்கு, தமது சொந்த நாட்டிலே தமிழ் பேசும் மக்கள் விஷயத்தில் ஸ்தம்பித்துவிட்டதேன்?

"இந்த நாட்டின் தேசியத் தாயாரான பிரதமர் சிறிமா, தமது தேசியப் புதல்விகளும் சகோதரிகளும் இப்படி ராணுதத்தினரால் பலாத்காரம் செய்யப்பட்டுக் கற்பழிக்கப் படுவதைக் கண்டு சகித்துக்கொண்டிருக்கிருரா?

(7-ம் பக்கம் பார்க்க)

## நியாயமான அளவு!

—'மாலா'




சமீபத்தில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மகாநாட்டில் இலங்கைப் பிரதமர் பேசியபோது, தமிழ் மக்களுக்கு நியாயமான அளவு மொழி உரிமை அளிக்கப் படுமென்று கூறினர்.

புதினம் 24-12-61

‘கரேல் செஸ்மன்’ கதை

‘ரமணன்’

# ‘சி. சி.’ தன் கைப்பட எழுதிய குறிப்பு!

“…..அன்று எனக்குஎன் வாழ்க்கையின்மீதே ஓர் வெறுப்புத் தோன்றியது. எந்தக் கொலையும் என்னை வருத்தியதில்லை! ஆனால் இக்கொலையோ என்னைநரகவேதனைக்குள்ளாக்கியது, இந்த நரக வேதனையிலிருந்து தப்புவதற்கு எந்த யுக்தியும் கிடைக்கவில்லை. அமெரிக்கப் பொலிஸ் புடையினரிடமிருந்தும், மற்றும் எத்தனையோ இரகசியப்படையினரிடமிருந்தும் தப்பியிருக்கிறேன். ஆனால் இந்த மனச்சாட்சியிடமிருந்து மட்டும் என்னால் தப்பமுடியவில்லை. இதன் பயனால் எனக்கு இரண்டு நாட்கள் உணவே கிடையாது. உண்பதற்கு மனம்விட்டால்தானே?”

இறுதியில் செஸ்மன். வில்சனை எப்படியாவது ஒரு மனிதனாக ஆக்கிவிட வேண்டுமெனசபதமெடுத்தான். இதைப்பற்றிஅவன் எழுதியது:—

“……என் சபதம் நிறைவேறுவதற்கு பணந்தான் தேவை. அதற்கு எந்தக் குறையுமில்லைத்தான்… இருந்தாலும் பணத்தை யாரிடம் கொடுப்பது? வில்சனின் தாய் மார்லின் பாடோவினுடையஅண்ணனிடம் கொடுத்தால்…நிச்சயமாக அவன் அப்பணத்தை தன் வசமாக்கிக்கொள்வான்… அப்படியானால் எப்படிக் கொடுப்பது?… “உனது தங்கையை கொலை செய்தவன், அவள் பிள்ளையின் நல்வாழ்வுக்காக அளிக்கும் பணம். பத்திரமாக வைத்து அவள் மகன் வில்சனைக் காப்பாற்று” என்று சொல்லிக்கொடுக்கமுடியுமா?…… அவன் எப்படிப்பட்டவனாகவும் இருக்கட்டும்! தனது தங்கை கொலைசெய்யப்பட்டு விட்டாள் எனஅறிந்ததும் நிச்சயமாக அவனுக்கு இரத்தபாசம் மேலெழும்புந்தானே?…என்னைக் காட்டிக்கொடுக்காமலாவிடுவான் ?”

செஸ்மன் இதற்குப் பின்னர்தான், எந்தக்கொலையையும் இனிச் செய்வதில்லையெனத் தனது தாயின்மீது சத்தியம் செய்துகொண்டான். ஆனால் அவன் திருந்தி நல்வாழ்வு வாழத் தொடங்கும் பொழுது வில்சனின் சமாச்சாரம் செஸ்மனை மாபெரும் கஷ்டத்துக்குள் மாட்டிவிட்டது.

பெரும் பெரும் சதிகாரர்கள் எல்லாம் ஏதாவதோர் சிறு விஷயத்திலே தான்மாட்டிக்கொள்வார்கள். அறுபது லட்சம் பெயரைக்கொன்ற அடல்ப் ஈச்மன் என்னவென்று மாட்டினான்?… ஒரு ஆறு வயதுக்குழந்தையிடம் அவன் காட்டியபரிவே இன்று அவனைத் தூக்கு மேடைக்கனுப்பப்போகிறது. அந்தச் சிறுவன் ஏதோ தான் செய்த தீரச் செயலால் ஈச்மனிடமிருந்து தப்பவில்லை. ஈச்மனின் காலிலே படிந்திருந்த ஒரு துளி இரத்தத்தை அச்சிறுவனின் கைகள் துடைத்துவிட்டன, அதற்காக அப்பையனின் உயிரும் தப்பிவிட்டது. அடல்ப் ஈச்மனின் ‘சிறு’ இரக்கம் இறுதியில் அவனையே படுகுழியில் தள்ளிவிட்டதே!

எப்படியாவதுவில்சனின் தாயை கொலை செய்த செயலிலிருந்து ‘பாவமன்னிப்பு’ அடையவேண்டுமென செஸ்மனின் மனம் விரும்பிற்று.பணம்தானே அவனுக்கு ‘பாவமன்னிப்’பளிப்பது?

இரண்டு மூன்று நாட்களிலே வில்சன்பத்திரமாக தனது வீட்டில் சேர்க்கப்பட்டான். செஸ்மனால் அப்பையனுக்கு எந்தத் தொந்தரவும் செய்யப்படவில்லை மார்லின்படோவின் சகோதரர் தனது தங்கை இறந்து விட்டாள் என அறிந்தவுடன் உண்மையிலேயே உள்ளக் கொதிப்பினால் அழுதிருக்கிறார். அதன்பின்னர் வில்சனை மிகவும் கவனமாக அவர் கவனிக்கத் தலைப்பட்டாராம்!

இச்சம்பவத்தை மார்லின்பாடோவின் சகோதரர் பொலிஸாருக்கும் அறிவித்துவிட்டார். பொலீஸாருக்கு செஸ்மன்மீது ஒரே சந்தேகம்தான். இருந்தாலும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை!

ஏனெனில் செஸ்மன் தனது வீட்டிற்கு எப்பொழுதும் பொலீஸ் வந்து தன்னை அவமானப் படுத்துவதாக ஓர் மான பங்க வழக்கும்கோட்டிலேதொடர்ந்திருந்தான் அவ்வழக்கிலே அவன் கோரிய பணம் கிடைக்காவிட்டாலும் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் நீதிஸ்தலத்திலே பசிரங்கமாக செஸ்மனிடம் மன்னிப்புக் கேட்டார்,

இதன் பயனால் டெக்ஸாஸ் பொலீஸ் படையினர் இருதலைக் கொள்ளியெறும்பாகத்தவித்தனர்.

ஒரு மாதம் எப்படியோ நடந்துவிட்டது. ஒரு நாள் வில்சனின் மாமா அன்றைக்கு வந்திருந்த கடிதங்களை உடைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவருக்கு பாங்கிலிருந்து வந்திருந்த கடிதமொன்று பேர் ஆச்சர்யத்தை உண்டுபண்ணியது. அதாவது இனம் தெரியாத ஒருவன் வில்சனின் பெயரில் பத்தாயிரம் டொலர்கள் கட்டியிருக்கிறான். அவர் உடனடியாக வில்சனை அழைத்துக் கேட்டார்.

“உன் அம்மாவைக் கொலை செய்தவன் உன்னுடன் பரிவுடன் நடந்தானா?” என்று வில்சன் தனது அம்மாவைக் கொலை செய்தவன் தன்னுடன்மிகவும் பரிவுடன் நடந்துகொண்டதாகவும் தனது கதையை கேட்டுவிட்டுத் தன் முன்னாலேயே அழுததாகவும் கூறினான்.

வில்சனின் மாமாவுக்கு எல்லாம் விளங்கிவிட்டது.

அவரால் இதை மேலும் பொலீசுக்கு அறிவிக்காமலும் இருக்கவே முடியவில்லை!

## செஸ்மனின் படத்தைக் கண்ட பொலீஸ் அதிபர் துள்ளிக்குதித்தார்!

பொலீசாருக்கு இது ஓர் அருமையான செய்தி! இந்தச் செய்தியின் உதவியைக் கொண்டே வழக்கை வெற்றி பெற்று விடலாமென அவர்கள் கருதினார்கள். ‘செக்’வந்த பாங்குக்கு பொலீஸ் இன்ஸ்பெக்டர் விரைந்தார். அங்கு அந்தக் கடிதமெழுதிய குமாஸ்தாவைக் கண்டு அச் செக்கின் ‘நம்பர்’ என்ன என அறிந்து கொண்டார், பின்னர் அந்த ‘நம்பர்’ செக்குக்கு பணம் வாங்கிய குமாஸ்தாவிடம் போய் பணம் கட்டியவனைக் கொண்டுவந்து நிறுத்தினால் அடையாளம் காட்டிக்கொடுக்க முடியுமா? என வினவினார். அக் குமாஸ்தாவும் “ஆம்” என்றுபதிலளித்திருக்கிறான்.

பொலீஸ் அதிகாரிக்கு இதைக் கேட்டவுடன் வந்த சந்தோஷமென்றால் அடக்கவேமுடியவில்லை! அவர் வழக்கில் தான் வென்றுவிட்டதாகவே எண்ணிக் கொண்டார். அவரது சந்தோஷத்திற்கு காரணமில்லாமலுமல்ல! அன்று காலை அமெரிக்காவிலுள்ள எல்லா பொலீஸ் ஸ்டேஷன் டெலிபோன்களும் கிணு கிணுத்தன. அமெரிக்க பொலீஸ் கொமிஷனரின் கட்டளைப்படி பழைய கேடிகள் யாவரும் கைது செய்து டெக்ஸாலுக்கு

(7-ம்பக்கம் பார்க்க)

## வருமானம் கருதி ‘வீட்டுவேலை’ செய்யும்

# விந்தை நடிகர்கள்!

லண்டன் மாநகரில் இப்பொழுது வீட்டைக்கழுவுதல், சாமான்களைச் சுத்தம் செய்தல் ஆகிய ஓய்வு நேரவேலைகளைச் செய்வதில், பெண்களுடன் ஆண்களும் ‘சரிநிகர் சமானமாக’ப் போட்டிபோட ஆரம்பித்திருக்கிறார்களாம்! இதிலே ஆச்சரியம் என்னவென்றால், அந்த வேலைகளைச் செய்வதற்கு நகைச்சுவை நடிகர்கள், திரைப்பட ‘எக்ஸ்ட்ரா’க்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள் ஆகியோர்இவ்விஷயத்தில் முன்னணியில் நிற்பது தான்!

வார்விக் பிரைஸ் என்ற நகைச்சுவை நடிகரும், அவருடையமனைவியும்,பாடகியுமான ஜோன் கோல்யரும் சேர்ந்து, இம்மாதிரியான ஓய்வு நேர வேலை செய்யும் ஆண்களைச் சேர்த்துக்கொண்டு, ஒரு ஸ்தாபனத்தையே நடத்தி வருகிறார்கள்! பெண்களுக்குக் கொடுக்கும் ஊதியத்தை விட ஆண்களுக்குக் கொடுக்கும் ஊதியம் கொஞ்சம் அதிகமானதாக இருக்கிறது. இருந்தாலும் பெண்களைவிட ஆண்களால் நிறைய வேலைகளையும், கஷ்டமான வேலைகளையும் செய்ய முடிகிறது என்று இந்தத் தம்பதிகள் கூறுகின்றனர். மேலும், இந்த வீடுசுத்தம் செய்யும் வேலைக்குப் பெண்களைவிட ஆண்கள்தான் லாயக்கு என்பது இவர்களது ஆணித்தரமான அபிப்பிராயம்!

“என்னைப்போன்றநடிகர்களுக்கு எப்பொழுதுமே நடிக்க வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஆகவே நடிக்காதநாட்களில் ‘வெட்டியில்’ நாட்களைக் கழிப்பதற்குப் பதிலாக இந்தமாதிரி வேலைசெய்வதன் மூலம் கொஞ்சமாவது சம்பாதிக்கலாமல்லவா? இதே போல் ஓவியர்கள், எழுத்தாளர் ஆகியோரும்காலையில்இம்மாதிரிவேலைசெய்துவிட்டு பகலிலும். மாலையிலும், தங்கள் தொழிலில் ஈடுபடாலாயல்லவா?” என்று திரு. வார்விக் பிரைஸ் கேட்கிறார்.

டக்கி கிளாக் என்ற மற்றொருஆங்கிலநகைச்சுவை தடிகர் இதைப்பற்றிக்கூறும்பொழுது “எனக்குஇதன் மூலம் வாரம் தோறும் எட்டுப் பவுண், பதினாறு ஷில்லிங் கிடைக்கிறது! மேலும் வேலையும் மிகவும் சுலபமாக இருக்கிறது.சில சமயங்களில் என்னுடைய நடிப்பையும், நகைச்சுவைப் பேச்சுக்களையும் அனுபவிப்பதற்கென்றே பலர் என்னைத்தங்கள் வீடுகளில் வேலைசெய்யக்கூப்பிடுகின்றார்கள்!” என்று சொல்லுகிறார்! அத்தோடு, “இன்னும் எத்தனையோதடவைகளில் நான் நாடகங்களில் நடித்துக் கொண்டிருக்கும் பொழுது ‘அடடே‘ இவன் எங்கள் வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரனாயிற்றே!’ என்று என்னை வேலைக்கு அமர்த்தியுள்ளவர்கள், தற்செயலாக நான் நடிக்கும் நாடகத்தைப் பார்க்க வரும் பொழுது கூச்சலிடுவதையும் கூட என்காதால்கேட்டிருக்கிறேன். அப்போது தான் நான் உண்மையிலேயே ஒரு நகைச்சுவை நடிகன் என்பதை அவர்கள் அறிந்து கொண்டு வாயைப்பிளக்கிறார்கள், ஆகவே அதற்குப்பிறகு அவர்கள் லீடுகளுக்கு ‘வேலை செய்வதற்காக’ப்போனால், அங்கு என்னை ‘கிளீனிங்’ எதுவும் செய்யவிடாமல், நடிக்கச் சொல்லியே பொழுதைப் போக்குகின்றனர். என்ன செய்யச் சொன்னால்எனக்கென்ன? எப்படியாயிருந்தாலும் எனக்கு வேண்டியது சம்பளந்தானே?” என்று கூறுகிறார் நடிகர் டக்கி கிளார்க்.

# 'எல்லாம் ஏசுவே, எனக்கெல்லாம் ஏசுவே!'

# எனக்குப் பிடித்த தனிப்பாடல் இது.

## 'ஜிக்கி' சொல்லுகிறுர்!

"எனது தாய் பாஷை தெலுங்கு. இருந்தாலும், இன்று தமிழ் எனக்குத் தண்ணீர் பட்டபாடு! நான் பிறந்த இடம் சென்னை தான். எனது தந்தையார் பெயர் கஜபதி நாயுடு. ஒரு டஜனுக்கும் அதிகமான சகோதர சகோதரிகள் என்னுடன் பிறந்தார்கள். அவர்களுள் ஆக மூத்தவள் நான்தான். இப்பொழுது எனக்கு வயது இருபத்தாறு. எனக்கு ஏழு வயது நடக்கும் பொழுதே சினிமாவில் பாட ஆரம்பித்துவிட்டேன்.

எனது முழுப் பெயர் பி. ஜி. கிருஷ்ண வேணி. ஆனுல், தற்போது இந்தப் பெயரைச் சொன்னுல் யாருக்கும் புரிவதில்லை. 'ஜிக்கி' என்ருல் தான் புரிகிறது. பி. ஜி. கே. என்பதன் மரூஉதான் 'ஜிக்கி' என்பது.

ஆரம்பத்தில் தெலுங்குப் படங்களில் மாத்திரமே பாடிக்கொண்டிருந்த நான், முதன் முதலாக 'ஞானசௌந்தரி" தமிழ்ப் படத்தில் பாடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. 'அருள்தாரும்தேவமாதாவே!' என்ற பாடல்தான் தமிழ்ப்பட உலகில் எனக்குப் புகழை ஈட்டித் தந்தது. பிறகு மந்திரி குமாரியில் 'உலவும் தென்றல் காற்றினிலே' என்ற பாடல், அடுத்ததாக எனது தமிழ்ப் படப் பாடல்களுக்கு அடி கோலியது. அதற்குப் பிறகு இன்றுவரை எண்ணற்ற பாடல்களைப் பாடியுள்ளேன்.


ஹிந்தியில் 'ஏக்தா ராஜா', 'மிஸ்டர் சம்பத்', 'ராணி' ஆகிய படங்களில் ஆரம்பத்தில் பாடுவற்கு வாய்ப்புக் கிடைத்தது. அதன் பிறகு பல பாடல்களைத் தொடர்ந்து ஹிந்தியிலும் பாடியிருக்கிறேன்.

தமிழில் நான் பாடிய படப்பாட்டுக்களில் 'அவன்' படத்தில் "அன்பே வா" என்ற பாடல் எனக்கு மிகவும் பிடித்தது. "எல்லாம் யேசுவே, எனக்கெல்லாம் ஏசுவே!' என்ற பாடல், நான் தனி இசைத்தட்டு ஒன்றில் பாடியது. எனக்கு மிகமிகப் பிடித்ததனிப்பாடல் இது! அதற்குப் பிறகு எத்தனையோ கிறிஸ்தவப் பாடல்களைத் தனி இசைத்தட்டுக்களில் பாடியிருக்கிறேன். எனது கிறிஸ்தவப் பாடல்களைக் கேட்கும் ரசிகர்கள் பலர், நான் ஒரு கிறிஸ்தவளா என்று கேட்டு எனக்குக் கடிதம் எழுதுகிருர்கள். "சங்கீதத்தில் இவ்வளவு பிரபலமடைந்து விளங்குகிறீர்களே, உங்கள் குரு யார்?" என்று கேட்டும் பல ரசிகர்கள் கடிதம் எழுதுகிருர்கள். அவர்களுக்கெல்லாம் நான் சொல்லும் பதில் இது தான்—

நான்சங்கீதத்தை முறைப்படி யாரிடமும் படிக்கவில்லை. எல்லாம் கேள்வி ஞானம்தான். சுருக்கமாகச் சொல்லப்போனுல், கிராமபோனும், ரேடியோவும்தான் எனது 'குருநாதர்'கள்! மிகச் சாதாரணமாக இருந்த எனக்கு இத்தனை பெயரும், புகழும் வரும் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை. எனக்குக் கல்யாணமாவதற்கு முன்பு எனக்கு ஒரு 'பயம்' இருந்து வந்தது. 'கல்யாணமான பிறகு நான் பாடுவதற்கு என் கணவர் சம்மதிப்பாரா? என்ற சந்தேகப் பயம் தான் அது. ஆனுல், நான் பயந்தது பெரும் தவறு. எனக்கு வாய்த்த கணவர் (திரு. ஏ. எம். ராஜா) ஒரு பிரபல பாடகராக—அதுவும் ஒரு சங்கீத டைரக்டராக இருக்கும் பொழுது நான் பாடுவதற்குத்தடை விதிப்பாரா? நான் தொடர்ந்து பாடவேண்டும் என்பதுதான் 'அவர்' விருப்பம்.

ரோஸ், சிவப்பு, கருப்பு ஆகிய வர்ணங்கள் எனக்கு மிகவும் பிடித்தமானவை: அணிகளை விட ஆடையில்தான் நான் அதிகமாகக்கவனம் செலுத்துவது வழக்கம். ஆபரணங்களில், கைநிறைய வளையல்களை மாத்திரம் அணிந்து கொள்வதில் எனக்கு விருப்பம் அதிகம்.

இலங்கையில் எனது அபிமான ரசிகர்கள் பலர் இருக்கிருர்கள். அவர்களில் சிலர் என்னை நேர்முகமாகக் காணுவிட்டாலும், கடிதத் தொடர்பால் நெருங்கிய 'நண்பி'களாகி விட்டார்கள்! இருந்தாலும் இப்பொழுது அவர்களுக்கெல்லாம் அடிக்கடி கடிதம் எழுத எனக்கு நேரமில்லாதது தான் எனக்குப் பெரும் மனவருத்தமாக இருக்கிறது. வீட்டில் 'அவரோடு' சேர்ந்து சினிமா பார்க்கப் போவதற்குக் கூட நேரமில்லை. வீட்டில் பல ரேடியோக்கள் இருந்தும், பாடல்களைக் கேட்பதற்குக் கூட முடியவில்லையென்ருல் பார்த்துக்கொள்ளுங்களேன்! ..... கடைசியில், இலங்கையிலுள்ள என் அபிமான ரசிகர்களுக்கெல்லாம் என் அன்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று, பிரபல பின்னணிப் பாடகியான 'ஜிக்கி' கூறினுர்.






பட உலகைவிட்டு நீங்கினுலும், ரசிகர்களின் மனதை விட்டு நீங்காத தாரகை! இவர் இடத்தை எட்டிப்பிடிக்க எந்தத் தாரகை முயலுகிறதோ?

## சிவாஜி பிலிம்சாரின் சாணக்கியா.

சிவாஜி பிலிம்சார், சாணக்கியா என்னும் சரித்திரக் கதையை டெக்னிக்கலரில் தயாரிக்கவிருக்கின்றனர். இந்தப் படம் தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்படவிருக்கின்றது. இப்படத்தை மூன்று மொழிகளிலும் பீம்சிங் டைரக்ட் செய்யப்போகிருர். சிவாஜி கணேசனே இம்மூன்று மொழிப் படங்களிலும் முக்கிய பாகமேற்று நடிக்கப்போகிருராம்!

## 'மக்கள் திலகம்"

பிலிம் காம்ரேடஸ் என்னும் திரைப்படக் கம்பெனியார், 'மக்கள் திலகம்' என்னும் பெயரோடு ஒரு படத்தைத் தயாரித்து வருகின்றனர்.

இப்படத்தில் எஸ். வி. ரங்கராவ், எஸ். ஏ அசோகன், சி. எல். ஆனந்தன் ராமராவ், புஷ்பலதா, ராஜ்ஸ்ரீ ஆகியோர் நடித்து வருகின்றனர். 'கோமகன்' கதை வசனம் எழுதிய இப் படத்தை டி. ஆர். ரகுநாத் டைரக்ட் செய்து வருகிருர்.

## "முத்து மண்டபம்"

எஸ். எஸ். ஆர். படநிலையத்தார் தங்கள் இரண்டாவது சமூகப் படத்திற்கு "முத்து மண்டபம்" எனப் பெயரிட்டுத் தயாரித்து வருகின்றனர். பிரபல நாவலாசிரியரான இராதா மணுளனின் நாடகமான "முத்து மண்டபம்" தமிழ் நாட்டில் பலமேடைகளில் அரங்கேற்றப்பட்டு புகழ்பெற்றது. அதுவே இப்பொழுது எஸ். எஸ். ராஜேந்திரனுல் படமாக்கப் படுகிறது.

இந்தப் படத்தில் எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, தட்சிணுமூர்த்தி ஆகியோரும் மற்றும் பிரபல நடிக. நடிகைகளும் நடிக்கவிருக்கின்றனர். கே. வி. மகாதேவன் இசையமைக்கும் இப் படத்தை திரு. ஏ. எஸ். ஏ. சாமி டைரக்ட் செய்யவிருக்கிருர்,

## "உஸ்...!"

பிரபல வட நாட்டுப் படத் தயாரிப்பாளரான குருதத், "உஸ்" என்ற பெயரில் ஒரு நகைச்சுவைப் படம் தயாரித்து வருகிருர். அதே நேரத்தில் இவர் "நீல் கமல்" என்ற படத்தையும் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார். 'நீல் கமல்' என்ற படத்தில் நந்தாவும், பிஸ்வஜீத்தும் ஜோடியாக நடிப்பார்கள். குல்ஷான் நந்தா எழுதிய ஒரு நாவலைத் தழுவி எடுக்கப்பட்ட இப்படத்திற்கான வசனத்தை திரு. குல்ஷான் நந்தாவே எழுதியுள்ளார். திரு. எம். சதீக் இப்படத்தின் டைரக்ஷன் பொறுப்பை ஏற்றுள்ளார்.

'உஸ்' என்ற நகைச்சுவைப் படத்தில் ஜானிவாக்கரும், துமலும் முக்கிய பாகங்களில்நடிப்பார்கள்.

# பலநாள் திருடனைக் காட்டிக் கொடுத்தது கோழி!

## சிருப்பர் வீட்டில் நடந்த சம்பவம்!

மட்டக்களப்பிலே பிரபல கோழிக் கள்ளர்களாயிருந்தவர்கள் வளர்ந்து வாழ்க்கையிலே பொறுப்பு ஏற்கத் தொடங்கிய சில வருஷங்களுக்கு இந்தக் கோழிக்களவு கொஞ்சங் குறைவாக இருந்தது. ஆனால் இப்போது இந்தக்களவு மிகவும் வளரத் தொடங்கிவிட்டது. சில வேலையில்லாத சோம்பேறி வாலிபர்கள் ஒரு குழுவாகக்கூடியே இந்தத்திருட்டுக்களைத்திட்டமிட்டு நடத்துவதாகத் தெரிகிறது. (சென்ற 9-12-61ல்) மட்டக்களப்புக் கச்சேரியில் வேலை பார்க்கும் சிருப்பர் வீட்டில் நடந்த ருசிகர சம்பவத்தைக் கீழே படியுங்கள்:-

ஞாயிற்றுக்கிழமை எழுந்து பார்த்ததும் கோழிக்கூடு காலிக்கூடாகக் கிடந்தது. ஒன்பது பெரிய கோழிகளை ஒரேயடியாகச் காணவில்லையென்றால் துக்கமிருக்காதா அவருக்கு? சிருப்பர் தேடாத இடமெல்லாம் தேடி, கேட்காதவர்களையெல்லாம் கேட்டுப்பார்த்தார். கதையைக் கேட்டவர்களெல்லாம் வாயிலே கையை வைப்பதுடன் தங்களின் அனுதாபத்தைத் தெரிவித்தார்களேயொழிய. கோழியின் மயிரைக்கூடக் கண்டுபிடிக்க உதவவில்லை! களவெடுத்தவன் ஒருவேளை கோழிகளைச் சந்தைக்குக் கொண்டு வரமாட்டானா என்று நினைத்துக்கொண்டு சந்தைக்குள் நுழைந்தார் சிருப்பர். ஒல்லியான ஒரு கோழி வியாபாரி கோழிகளை வைத்து விற்றுக்கொண்டிருந்தான். கோழிகளுக்கு என்ன குறியாவைத்திருக்கிறது. கண்டு பிடித்து வாதாடுவதற்கு? அங்கேயிருந்த கோழிகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துக்கொண்டுவந்த சிருப்பரின் கண்கள் ஒரு கோழியை மிகவும் குறுகுறுப்பாகப்பார்த்தன.

அந்தக் கோழியின் காலிலே சிறிய பட்டுத்துணியொன்று கட்டப்பட்டிருந்தது. அடுத்த வீட்டுக் கோழியுடன் கலந்துவிடுமே யென்பதற்காக அடையாளமாகக் கட்டியிருந்தார்கள் அந்தப் பட்டுநூலை. பட்டு நூலைக் கண்டதும் அது தனது கோழிதானென்பது ஊர்ஜிதமாகிவிட்டது அவருக்கு. "இந்தக் கோழி மாதிரி இன்னுமொரு கோழி எடுக்க முடியாதா" என்று கேட்டார் வியாபாரியை. தனக்கு வந்த சான்ஸை விட்டுக் கொடுப்பானா வியாபாரி? – இதோ இருந்து கொள்ளுங்கள் வீட்டுக்குப் போய்ப் பிடித்துக்கொண்டு வருகிறேனென்று வீட்டுக்கு விரைந்தான் கோழி வியாபாரி.

போனவன் வருமுன்பு சிருப்பர் விஷயத்தைப் போலீசுக்குச் சொல்லிவிட்டார். கோழிக்களவு முறைப்பாடுகள் நிறைய வந்திருந்தும் கோழிக் கள்ளர்களைத் தேடிப் பிடிப்பதற்கு வழி தெரியாமல் திண்டாடிய போலீசார் சும்மாவா விடுவார்கள்? வியாபாரியை வெருட்டி உருட்டினார்கள். கண்களைப் பிதுக்கிக் கைகளைப் பிசைந்துகொண்டே உண்மையைக் கக்கிவிட்டான் வியாபாரி. கல்லடித் தெருவிலிருக்கும் செல்வமென்ற இளைஞனும் இன்னும் சிலரும்தான் கோழிகளைத் தனக்கு விற்றதாகவும் சொன்னான்.

அவனுடைய வாக்குமூலத்தின்படி செல்வத்தைத் தேடிப் போன போலிசரர், செல்வத்தைக்காணவில்லை. பதிலுக்குச் சிருப்பரின் கோழிச் செல்வங்களின் முண்டங்களைத்தான் கண்டார்கள்! ஆனைப்பந்தி முச்சந்தியிலேயிருக்கும் கணேசனின் கடையுடன் இணைந்திருக்கும் வீட்டைச் சோதனை போட்டபோது, ஒரு பெரிய சட்டிக்குள்ளே உரித்த கோழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அத்தோடுகூட இரண்டு போத்தல் சாராயமும் அங்கே கண்டெடுக்கப்பட்டது! அதிலேசம்பந்தப்பட்டவர்களின் உடம்பிலே போலீசாரின் கைவரிசை இடம்பெற்றபோது "செல்வம்தான் பிரபல கோழிக் கள்ளன். அவன்தான் இதைச் செய்தான்" என்று கூறி முடித்தார்கள். போலீசார் விசாரணையைத் தொடர்ந்து நடத்துகிறார்கள்.

"பலநாளையக் கள்ளன் ஒரு நாளைக்குப் பிடிபடுவான்" என்று கூறுவது எவ்வளவு உண்மை பார்த்தீர்களா? அதிலும் அவன் களவெடுத்த கோழியே அவனைக் காட்டிக்கொடுத்ததென்றால்... இன்னுமேன் பேசுவான் களவுத்தொழிலின் கண்ணியத்தை!

(நமது நிருபர்)

## தொப்பி போடுவதில் சிறந்த மனிதர்!

தலையங்கத்தைப் படித்தவுடன் என்னவோ, ஏதோ என்று எண்ணி, 'யார் யாருக்குத் தொப்பிபோட்டார்கள்?" என்று கேட்டுவிடாதீர்கள்! நம் ஆசாமிகள் ஒருவருக்கொருவர் 'தொப்பிபோடுவது' ஒருபுறமிருக்க—

அமெரிக்காவிலுள்ளஒரு சங்கம், 1961-ம் வருடம், உலகத்திலேயே அழகான தொப்பியை அணியும் மனிதர்கள் யார் யார் என்று ஒரு விசித்திரமான ஆராய்ச்சி நடத்த ஆரம்பித்துள்ளது! இந்தச் சங்கம் நடத்திய ஆராய்ச்சியின்முடிவின்படி அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கென்னடி, அழகான தொப்பி வைத்திருப்பவர்எனத்தீர்மானிக்கப்பட்டது. ஆனால் ஒரு துர்அதிர்ஷ்டம், கென்னடி தொப்பியை எப்பொழுதும் தலையில் அணியாமல், தம் கையிலேயே வைத்துக் கொண்டிருப்பதால் அவர் சிறந்த தொப்பி அணியும் மனிதர் என்று கூறமுடியாது என்று அந்தச்சங்கம்குறிப்பிடுகிறது!

பிரபல நடிகரான பிராங்சினட்ரா என்பவரும் சிறந்த தொப்பி அணியும் மனிதர்களில் ஒருவர் என்று அந்தச் சங்கம் தீர்ப்புக் கூறியுள்ளது!




# இத்தால்... சகலரும் அறிவது!

### தம்பரா, ஆறுமுகமா?

கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் 'புதினம்' காரியாலயத்தில் சவாரித் தம்பரையும், சின்னக்குட்டியையும் சந்தித்துக் கதைத்ததாகச் சுருட்டுக்கடைச் சுப்பையா சொன்னார். அது தினகரனில் இருக்கும் தம்பரா, அல்லது வீரகேசரியில் இருக்கும் அண்ணாவி ஆறுமுகமா?

கொழும்பு-9 —பி. விக்டர்

### கஞ்சா(ஆ)சாமிகள்!

செல்லச்சந்நிதிக் கோவிலில் வைத்து ஒரு சாமியாரைச் சந்தேகத்தின்பேரில் பொலீசார் கைதுசெய்து சோதித்தபொழுது, அந்தச் சாமியாரிடம் 580 கிறைன் கஞ்சா இருந்தது! பருத்தித்துறை நீதவான் அவருக்கு ஒரு மாதச் சிறைத்தண்டனை விதித்திருக்கிறார். இப்படியான 'ருத்திராட்சப் பூனை'கள் இருப்பதால் உண்மைச் சாமியார்களுக்குப் பெரும் களங்கமல்லவா?

ஊர்காவற்றுறை. —ஏ பஞ்சாட்சரம்.

### Where is Mala?

There was no Political Cartoon in last week's 'Puthinam' . . why? ....where is mala?

Colombo—7 —G. Vathsala.

### தண்டவாளத்தில் பஸ்!

"பஸ் ஓடுகிறது!" என்ற தலையங்கத்தைப் போன வாரம் புதினத்தில் படித்துவிட்டு, 'ஒருவேளை தண்டவாளத்தில் பஸ் ஓடுகிறதோ?' என்று ஆவலோடு விஷயத்தைத் தொடர்ந்து படித்தேன். பிறகுதான் விபரம் புரிந்தது: சம்பந்தப்பட்டவர்களின் வண்டவாளத்தை நாசூக்காகச் சொல்லிவிட்டீர்களே!

கண்டி. —ஆர். பொன்னம்பலம்

### கிளர்ச்சி!

கடந்த 10-12-61 புதினம் இதழில் மோகலே ஆஜம் படம் திரையிடக் கூடாது என்று ரங்கூனில் தமிழ் அன்பர்கள் கிளர்ச்சி செய்த விஷயத்தைப் படித்தேன்.

இலங்கையில் ராஜா தேசிங்கு படம் திரையிடப்படாத பட்சத்தில், மோகலே ஆஜம் படமும் திரையிடக்கூடாது என்று தமிழ் அன்பர்கள் கிளர்ச்சிசெய்ய வேண்டும்!

நோர்வுட். — என். கருப்பையா

### யாழ்ப்பாணத்தில் 'ரிக்ஷோ வாலா'

கடந்த 16-12-61 அன்று இரவு யாழ்ப்பாண முற்றவெளியில் நடக்கும் காணிவல் மேடையில் காட்சியளித்த நடிகர் பாலாஜி, தான் சென்னையில் அரங்கேற்றிவரும் 'அவன் வந்த வழி' 'ரிக்ஷோ வாலா' ஆகிய நாடகங்களின் சில பாகங்களைத் தனிமையில் தத்ரூபமாக நடித்துக் காட்டியதை நம் உள்ளூர் 'நடிக சிகாமணி'களும் வாயைப் பிளந்து பார்த்துக்கொண்டு நின்றனர். அவர்களுக்கெல்லாம் நடிகர் பாலாஜியின் நடிப்பு ஒரு 'பாடமாக' அமையும் என்று நம்புகிறோம்.

யாழ்ப்பாணம். —எஸ். முருகேசு.
—பி. செல்வராசா.

### கடவுளைக் காணவில்லை!

ரஷ்ய வானவெளிப் பிரயாணி ககாரின், "வானவெளியில் எல்லாவற்றையும் கண்டேன்; ஆனால் கடவுளைமட்டும் காணவில்லை" என்று சொல்லியிருக்கிறாரே, ஒருவேளை மேல் உலகத்திற்கும் அவர்போயிருந்தால்......

பதுளை. — எம். சித்தீக்

### ஜி. ஜி. எங்கே?

கடந்த வாரம், 'ஜி. ஜி. எங்கே?' என்ற புதினத்தின் தலையங்கத்தைப் பார்த்துவிட்டு என்னமோ, ஏதோ என்று பயந்துபோய்விட்டேன்!......

கோப்பாய். — ஆர். எல். எஸ்.

### காதல் பயம்!

சரோஜாதேவி காதல்கட்டங்களில் நடிப்பதற்குத் தனக்குப் பயமாக இருப்பதாகச்சொல்லுகிறாரே. அப்படியானால் அவர் ஏன் நடிக்கவேண்டும்?

களுவாஞ்சிக்குடி. — 'சாவித்திரிப் பிரியன்'

# உங்கள் காலபலன்

## இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

**24-12-61 முதல் 30-12-61 வரை**

**மேடம்:** உங்கள் பிதாவழி பந்துக்களாலும் பிதாவாலும் சில நன்மைகள் தொடர்ந்து கிடைக்கும். தொழிலைப் பொறுத்தவரையிலும் இது நல்ல வாரம். ஆனால் வாகனுதிகளாற் செலவும், மாதாவுக்குப் பீடையும் காணப்படுகிறது.

**இடபம்:** தேகநிலையில் சிறு அபிவிருத்தி காணப்படுகிறது. குடும்பச் சூழ்நிலையிலும் திருப்திகரமான மாற்றம் உண்டு. தடைகளைச் சமாளித்துக் கருமங்களில் வெற்றி பெற முடியும். இளைய சகோதரரால் நன்மையுண்டு.

**மிதுனம்:** இது ஒரு அமைதியற்ற வாரம். மனதில் அமைதி நிலவாது. தொழில் ஸ்தானத்திலும் சங்கடங்கள் காணப்படுகின்றன. நண்பர்களில் நம்பிக்கைக் குறைவு ஏற்படும். எல்லாக் கருமங்களிலும் அவதானமாக நடக்கவும்.

**கடகம்:** பிரயாசம் அதிகமாக இருக்கும். அதிக எதிர்ப்புகள் ஏற்பட்டாலும், அவற்றைச் சமாளித்து வெற்றிகாண முடியும். வாரமுடிவில் தேகசுகவீனம் ஏற்படும். சில குடும்பத் தகராறுகளும் காணப்படுகின்றன.

**சிங்கம்:** பிரதானமான விஷயங்களில் ஒரு தீர்மானமான முடிவுக்கு வருவது சங்கடமாக இருக்கும். மனச் சஞ்சலம் ஏற்படும் ஆனால் தொழிலைப் பொறுத்தவரையில் முன்னேற்றம் உண்டு. சத்துரு ஜயமும் உண்டாம்.

**கன்னி:** நண்பர்களால் பலவித உதவி கிட்டும். தொழில் முன்னேற்றம் காணப்படுகிறது. ஆனால் மாதாவழி பந்துக்களால் சில சங்கடங்கள் ஏற்படலாம். அல்லது மாதாவுக்குச் சுகவீனம் உண்டாகும்.

**துலாம்:** இளைய சகோதரரால் விசேஷ உதவிகள் கிட்டும். கமத்தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். ஆனால் மனதில் அமைதி நிலவாது. நண்பர்களாலும் உறவினராலும் சிறு கஷ்டங்கள் வார இறுதியில் ஏற்படும்.

**விருச்சிகம்:** பொருளைப் பொறுத்தவரையில் இது நல்லவாரமாம். பூமியால் லாபம் கிட்டும். ஆனால் தேக சுகவீனம் காணப்படுகிறது. கண்ணில் நோய் ஏற்படலாம்.

**தனுசு:** ஞாயிறு, திங்கள் வாரங்களையும் செவ்வாய் காலையையும் அவதானமாகச் செலவிடவும். கருமங்களில் திடமான ஒரு முடிவுக்கு வரமுடியாதபடி மனக் குழப்பமும் ஏற்படும். தேகசுகவீனமும் காணப்படுகிறது. ஆனால் பொருள் விருத்தி உண்டு.

**மகரம்:** மனதில் அமைதி நிலவாது. செவ்வாய் பிற்பகலையும், புதன், வியாளன் வாரங்களையும் அவதானமாகச் செலவிடவும். உறவினரால் கஷ்டங்கள் ஏற்படும். குடும்பச் சூள்நிலையும் திருப்திகரமாக இருக்காது.


**கும்பம்:** வார முற்பகுதியில் தொழில் முன்னேற்றம் உண்டு எதிர்ப்புகளைச் சமாளித்து வெற்றி காண முடியும். பொருள் விருத்தியும் உண்டு. வியாழன், வெள்ளி, சனி வாரங்களில் சில சங்கடங்கள் ஏற்படலாம்.

**மீனம்:** வயிற்றில் சுகவீனம் காணப்படும். ஆனால் தொழில் முன்னேற்றம் உண்டு. எதிர்பார்த்திராத வகையில் லாபம் கிட்டும். சிறு பிரயாணம் ஒன்று காணப்படுகிறது.


### சோதிடம்

உங்கள் பெயர், பிறந்த ஊர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ. 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினுல் உங்கள் ஒரு வருட கால பலன் மிகச் சரியாக எழுதி அனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்து அனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூபா 3-00 அனுப்பினுல் போதுமானது.!

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

அப்துல்லா அன் கோ
அனுமதி பெற்ற
கண் பரிசோதகர்கள்
கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 486


# ...பேச்சளவில் நிற்கிறதே?

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

"பிரதமரே, தமிழ் மக்களை இழிவு படுத்துவது இந்த நாட்டுமக்களைஇழிவு படுத்துவதாகமுடியும்.

இந்த அநீதிகளுக்கெல்லாம் நீர் பதில் சொல்லியாகப் போகிறீர்" என்று பேசியிருக்கிறுர். இந்தப் பேச்சுக்களையெல்லாம் வாசிக்கும்போது தமிழ் மக்கள் என்ன செய்தாலும் திரு. எட்மண்ட் சமரக்கொடிக்கு, அவர்களது நன்றிக் கடன் தீராது என்றே சொல்லத்தோன்றுகிறது.

பொதுவாக, சமசமாஜக் கட்சித் தலைவர்களது இந்தப் பேச்சுக்களை வாசிக்கும் போது அவர்களது நேர்மையையும், சிறுபான்மையோர் பிரச்சினை தீர்க்கப்படுவதில் அவர்களுக்குள்ள ஆர்வத்தையும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆனுல் இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் இன்னொரு விஷயத்தையும் சிந்தித்துப் பார்ப்பது நல்லது. பரந்த அளவில் சமசமாஜக் கட்சிக்கு தமிழ் மக்களிடையே நிறைந்த செல்வாக்கு உண்டு. சமசமாஜக் கட்சியை மதிப்புக் குறைவாகப் பேசுகின்ற தமிழ் மக்கள் ஒருவரும் இல்லையென்றுகூடச் சொல்லலாம். சமசமாஜக் கட்சியினர் இவ்வளவு பரிவோடும் பாசத்தோடும் தமிழ் மக்கள் பிரச்சினையில் பேசியும் கூட, தங்களை வழிநடத்திச் செல்லும் தலைமைப் பதவியை தமிழ் மக்கள் சமசமாஜக் கட்சிக்கு தராத காரணம் என்ன?

பஸ் தொழிலாளருக்கு ஏதாவது இடுக்கண் நேர்ந்தவுடன், சமசமாஜக் கட்சி வேலை நிறுத்தம் போன்ற நடவடிக்கைகளை எடுத்துப்போராட்டக்களத்தில் குதிக்கின்றது. துறைமுகத் தொழிலாளர் விஷயத்திலும் இதே சங்கதிதான். சமசமாஜக் கட்சி உடனே போராட்டத்தில் இறங்கி விடுகிறது. ஆனுல் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பொறுத்த மட்டில் அவர்களுக்காகப் பரிந்து சமசமாஜக்கட்சி அற்புதமாகப் பேசுகின்றதே தவிர, நேரடியாக போராட்டக் களத்தில் குதிக்கக் காணேம்!

தமிழ் மக்களின் தலைமைப் பதவியை சமசமாஜக் கட்சி கோட்டைவிட்டதற்கு இதுதான் காரணமாக இருக்கலாமோ?

இருக்கலாம் என்றுதான் சொல்லத்தோன்றுகிறது!

## 'கரேல் செஸ்மன்'

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

அனுப்பப்பட்டார்கள். குறிப்பாக செஸ்மன் டெக்ஸாஸிலிலேலகைதுசெய்யப்பட்டான். ஏனெனில் அவனும் தனது "கொள்கைக்"காகப் பலமுறை டெக்ஸாஸிலிலேயே சிறை சென்றவன் தானே?

செஸ்மன் அன்றைக்கு தன்னிடமிருந்த ஆயுதங்களின் உதவியாலேயோ அல்லது தன்னுடைய மூளையின் பலத்தினுலேயோ தப்பிப் போயிருக்கலாம். ஆனுல் அவன் அதைச் சிறிதும் விரும்பவில்லை! காரணம் யாதெனில், அவன் வில்ஸனின் தாயைக் கொலை செய்த அன்றே தான் இனிமேல் கொலைசெய்யாது நல்லவனுக வாழவேண்டுமென சபதமெடுத்துக் கொண்டான்.

மூன்று நாட்களுக்குப் பின்னர் செஸ்மனுடன் மற்றக் கோஷ்டிகள் எல்லாரும்வங்கிக் குமாஸ்தாவின் முன் நிறுத்தப்பட்டார்கள். செஸ்மன் எது நடக்கக்கூடாதென எண்ணினுனே அதுவே நடந்தேறியது. குமாஸ்தா அடையாளம் கண்டு கொண்டான்!

பொலிஸ் படையினர் அந்த இடத்திலேயே வைத்து செஸ்மனை கைது செய்தனர்.

அடுத்த நாள் காலை கொட்டை எழுத்துகளில் "மர்மம் வெளியாகியது! மார்லின் பாடோவை கொலை செய்தவன் கண்டு பிடிக்கப்பட்டான்!" என செய்திப் பத்திரிகைகள் யாவும் செஸ்மனின் போட்டோவுடன் செய்தியை பிரசுரித்தன.

சி. சி, யை கண்ணுல் கண்ட ஒரே ஒரு இரகசியப் பொலீஸ் அதிகாரி செய்தித்தாளை புரட்டிக்கொண்டிருந்தார். செஸ்மனின் படத்தைக் கண்டதும் அவருக்குப் பகீரென்றது! 'சி. சி.'யை தான் கண்டுபிடித்துவிட்டதாக எண்ணிக்கொண்டு சந்தோஷத்தினுல் அவர் துள்ளிக் குதித்தாராம். (தொடரும்)

நாடக விமர்சனம்:

## சங்கிலியன்.

சங்கிலியன் இலங்கைத் தமிழர் வரலாற்றில் ஒரு வீரபுருஷன். அவன் போராட்ட வரலாறு, தமிழ் மக்கள் மத்தியில் சுதந்திர உணர்வையும், உத்வேகத்தையும் ஊட்டி விடும். ஆனுல் ........?

சென்ற 17—12—61 ஞாயிற்றுக்கிழமை இரவு கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில், யாழ். கலை அரங்கத்தாரால் மேடையேற்றப்பட்ட 'சங்கிலியன்' நாடகம், அந்த விறல்வேந்தனின் வரலாற்றைச் சந்தி சிரிக்கவைத்து விட்டது! சங்கிலியனை வெறும் காமாந்தகாரனுக — ஒரு நோஞ்சாஞுக-துளியும்வீரமற்ற பேடியாகச் சித்திரித்திருந்தனர்! போதாதற்கு கதையிலுள்ள பெண் பாத்திரங்களையெல்லாம், நடைபாதை நாட்டியக்காரிகள் போல ஆக்கி— நாடகத்தில் நடிப்பால் எடுபடாத நடிகைகளின் அங்கங்களின் திரட்சியை எடுத்துக்காட்டுவதற்காகப் போலும், நடனமாட வைத்திருந்தார்கள்! சங்கிலியன் காலத்து யாழ்ப்பாணப் பெண்களின் மானத்தை—கற்பைப் பார்ப்பவர்கள் சந்தேகிக்கக்கூடியதாயிருந்தது!

போர்த்துக்கேய தளபதி பிரகன்சாவாக நடித்த குமாரசாமியின் நடிப்பு, 'ஓவர்'—பல இடங்களில் காட்டுக் கூச்சல்!

இந்த நாடகத்தில் குறிப்பிடக்கூடிய ஒரே நடிகர் மாப்பாணனுக நடித்த மீராசுந்தர்தான் மேடையனுபவமுள்ளவரென்பதை. சோடை போகாத நடிப்பு மூலம் உணர்த்த அவர் தவறவில்லை.

மாப்பாண முதலியின் கள்ளக்காதலி (?) ஆடும் நடனம் கண்ருவி! போர்த்துக்கேயர் இங்கு வரும் பொழுதே இந்த 'ரொக் அன் ரோல்' நடனத்தையும் கண்டு பிடித்து, ஒருத்தியைத் தம்முடன் கூட்டி வந்திருக்க வேண்டும்!—கதாசிரியர் — டைரக்டருடைய மூளை இப்படி விசித்திரமானதோ!

கதை ஒரே குழறுபடி: காட்சிகள் ஒழுங்கில்லை. வசனமோ? — சாதாரண தெருக்கூத்துகளிலும் மட்டம்! வீரபுருஷன் சங்கிலியன் மானத்தை, தலைநகரத்தில் இப்படியா வாங்கவேண்டும்? இந்த நாடகத்தைப் பார்க்க நேர்ந்திருந்தால் சங்கிலியனின் ஆவி கூட நாக்கைப் பிடுங்கிக் கொண்டு தற்கொலை செய்திருக்குமே!

—'புது[illegible]'

Registered as a newspaper at the G. P. O.

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

# உதவியாசிரியர்களின் வாயை மூடுவதற்கா அதிகாரி வருகிருர்?

## ஆசிரிய சங்கம் சேர்த்த பணம் எங்கே?

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் முப்பத்தெட்டாது வருடாந்தக் கூட்டம், 27—12—61ல் நடைபெறப்போவதாக அறிகின்ருேம்.

"38 ஆண்டும் இச் சங்கத்தின் தலைவராக யாராவது ஓர் தலைமையாசிரியர் தானே வந்துள்ளார்? உதவியாசிரியர்கள் தலைவராகவிருக்கத் தகுதியற்ருேரா? இதன் காரணம் யாது? தலைமையாசிரியர்களுக்கு என்று ஓர் 'தலைமையாசியர்' சங்கமே உண்டே! இப்போது வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் தலைவராக உள்ள வித்துவான், சி. இ. கந்தசாமி அவர்கள், சங்கத்திலேயே 5-ம் வகுப்புப்பரீட்சையிருக்க, வேறு ஒரு 5-ம் வகுப்புப் பரீட்சையை பருத்தித்துறைப் பகுதியில் நடாத்திஞரே! இது சங்கத்தை அவமதித்ததாகவில்லையா?

இப்போது நடைபெற்று வரும் தமிழாசிரியர் சங்கத்தின் கூட்டங்களில் உதவி வித்தியாதிகாரி திரு. எஸ். யூ. சோமசேகரம் அவர்களும் கலந்துகொள்கின்ருரே! எதற்காக? உதவியாசிரியர்களின் அபிப்பிராயங்களைப் பேசவிடாது தடுக்கும் யுக்தியா? அதுவுமல்லாது, சென்ற பங்குனி, சித்திரை மாதங்களில் ஆசிரியர்களிடம் சேர்ந்த பணமெங்கே? யாரிடம் உண்டு? இதற்குப் பதில் கூறுது தப்புவதற்காகப்போலும், உதவி வித்தியாதிகாரியை இழுத்து வருகின்றனர்"— இவ்வாறு இக் கூட்டம் பற்றி அபிப்பிராயம் தெரிவித்த ஒரு உதவி ஆசிரியர் எமது நிருபரிடம் குறிப்பிட்டார். உதவி ஆசிரியர்கள் சிந்தனை என்று வேலை செய்கின்றதோ, அன்று பல திருவிளையாடல்கள்' வெளி வரலாமாம்!

## மாணவர்களே, எழுதுங்கள்! உங்கள் அதிபரைப்பற்றி!

மாணவர்களே, உங்களுடைய 'கைவரிசையை'க் காட்ட 'புதினம்' ஒரு நல்ல சந்தர்ப்பத்தை தருகிறது!

உங்களுடைய கல்லூரி நிர்வாகத்தை மேற்கொண்டிருக்கும் அதிபரைப் பற்றி, உங்களுக்குத் தெரிந்தமாதிரி வேறு யாருக்கும் தெரிய முடியாது! அவரிடம் உங்களுக்குப் பிடித்த குணங்களும் இருக்கலாம்; பிடிக்காத குணங்களும் இருக்கலாம். சுவையும், எளிமையும் நிறைந்த முறையில் அவரைப் பற்றி எழுதுங்கள் பார்க்கலாம்!

திறமையாக எழுதினீர்களானல், தரமான புத்தகங்களைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரே ஒரு 'புல்ஸ்காப்' தாளில், ஒரு பக்கத்தில் மட்டும் எழுதி அனுப்புங்கள். அது போதும்!

அனுப்பவேண்டிய முகவரி:—

**'இவரே எங்கள் அதிபர்'**
'புதினம்' 226, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

## 'திரை மறைவில்'

நமதுவிசேஷ ஒற்று நிருபர்களுள் ஒருவரான 'அம்பலத்துறைவோன்' தேர்தல் சூடு பிடித்திருக்கும் தென்னிந்தியாவிற்குச் சுற்றுப் பிரயாணம் சென்றிருப்பதால், இரண்டு வாரங்களாக அவரது விசேட செய்திகளை வெளியிட முடியவில்லை. ஆனலும் நேயர்கள் குறை கூறமாட்டார்களென நம்புகிருேம்—ஏனெனில் 'தென்னிந்திய அரசியல் அரங்கிலுள்ள சில சுவையான செய்திகளை' அவர் அம்பலத்துக்குக் கொண்டுவருவதாக வாக்களித்துவிட்டுத்தான், மேற்படி சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டுள்ளார். அவரை அடுத்த வாரம் சந்திக்கலாம்!

## கிறிஸ்தோதய வாழ்த்து!

சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிலுள்ள ஹைதராபாத் நிஜாம், ஐம்பதாயிரம் கிறிஸ்தோதய வாழ்த்து இதழ்களுக்குமேல் தம் நண்பர்களுக்கு அனுப்பிவைத்தாராம். அதுவே இன்றுவரை ஒரு உலக 'ரிக்கார்'டாக இருந்து வருகிறது!

## 1962 மார்ச் மாதத்தில் மூடுவிழாக் காணவிருக்கும் சீனன் குடா பிரிட்டிஷ் கடற்தளம்! தொழிலாளர் நிலை என்ன?

சீனன்குடாவிலுள்ளபிரிட்டிஷ் கடற்படைத்தளத்தில் வேலை செய்யும், சுமார் 25 தொழிலாளர்களுக்கு, 15—12—61ல் ஒருமாத முன்னறிக்கை நோட்டீஸ் கடற்படை நிர்வாகிகளால் கொடுக்கப்பட்டது.

1962-ம் வருடம் மார்ச் மாதக் கடைசியில் பிரிட்டிஷ் படையினர் இலங்கையை விட்டு வெளியேறவேண்டுமென்ற காலஞ்சென்ற பிரதமரின் ஒப்பந்தப்படி, படிப்படியாக ஆள் குறைப்பு நடைபெற்று வந்தது.

தாங்கள் வேலையை விட்டு வெளியேறும்போதே, தங்களுக்கு வருமதியான 'கிறேட் டியூட்டி'ப் பணம் கிடைக்கவேண்டுமென்பது தொழிலாளரின் வாதம். தங்களது பிரதம அலுவலகம் (Cash Office) இலங்கையில் இல்லாததிஞல், சிங்கப்பூரிலுள்ள தங்கள் அலுவலகத்திலிருந்து கணக்கு முடித்து வர, சிறு தாமதமாகுமென்பது நிர்வாகிகளின் பிரதிவாதம்.

எதுவெப்படியிருப்பினும், சீனன்குடா எண்ணெய்த் தொட்டிகளை அரசாங்கமோ, கம்பனிகளோ பொறுப்பேற்குமென்று கடந்த பல வருடகாலமாகக் கனவு கண்டுவந்த வியாபாரிகளும், தொழிலாளர்களும் பெரும், ஏமாற்றமும் அதிர்ச்சியுமடைந்திருக்கின்றனர்.

கடந்த 35 வருடகாலமாகச் சேவையாற்றுவோரும் பலருண்டு! இதுகால்ம் வரை தங்களுக்குத் தொழில் கொடுத்து உதவிய மைக்கு நன்றி கூறும் தொழிலாளரும் உண்டு! "வேலையை விட்டு வெளியேறும்போது, ஆயிரக்கணக்கில் அள்ளி எடுக்கப் போகிருேம்" என்று ஆசைக்கனவு காண்போருமுண்டு! இப்படிப்பட்ட சம்பளமும் சலுகைகளும் இனி எங்கே கிடைக்கப்போகிறதென்று கவலைப்படுவோருமுண்டு!

எனினும், 1962 மார்ச் மாதத்தில் இங்குள்ள பிரிட்டிஷ் கடற்படையின் பரிபூரண "மூடுவிழா' நடைபெறுமா என்பது பலரின் கேள்விக்குறியாக இருக்கிறது!

—"கத்தரிக்கோல்"

இப்பொழுது வாங்கலாம்,

ஒரு



**ஆனந்தா**

**திருக்குறட்**

**கலண்டர்**

அதுவே சிறந்தது!
எங்கும் கிடைக்கும்.

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச, வரதராசன்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348, தந்தி; அச்சகம்.